# கூட்டுறவு

மலர் : 96 ✦ செப்டம்பர் : 2023 ✦ இதழ் : 6

**கூட்டுறவு இயக்கக் கொள்கை விளக்க இதழ்**

எல்லார்க்கும் எல்லாமே என்றே ஞாலம்
இலங்கிடவே கூட்டுறவு ஏற்ற பாதை
இல்லாமை இல்லாத வாழ்வு வேண்டின்
ஏற்றிடுவோம் கூட்டுறவு வெற்றிப் பாதை



ஆசிரியர்:

**கோ.க.மாதவன்,** எம்.ஏ., பி.எட்., எச்.டி.சி.எம்.,

தொலைபேசி : 2836 4865 & 66
ஃபேக்ஸ் : 2836 4035

மின்னஞ்சல் : tncu08@gmail.com

**இணையதளம்: www.tncu.tn.gov.in**



**ஆயுள் சந்தா ரூ. 2000**
**(பத்தாண்டுகளுக்கு)**
**ஆண்டு சந்தா ரூ.210**
**தனிப்பிரதி விலை ரூ.20**



## விளம்பரக் கட்டணம்

பல வண்ணம் (ஓராண்டிற்கு)

| | | |
|---|---|---|
| **அட்டை 4 ஆம் பக்கம்** | **ரூ.** | **50,000** |
| **அட்டை 2 & 3ஆம் பக்கம்** | **ரூ.** | **40,000** |

உள்ளே கருப்பு–வெள்ளை
(ஓராண்டிற்கு)

| | | |
|---|---|---|
| **முழுப்பக்கம்** | **ரூ.** | **24,000** |
| **அரைப்பக்கம்** | **ரூ.** | **12,000** |

உள்ளே கருப்பு–வெள்ளை
(6 மாதங்களுக்கு)

| | | |
|---|---|---|
| **முழுப்பக்கம்** | **ரூ.** | **12,000** |
| **அரைப்பக்கம்** | **ரூ.** | **6,000** |


## *இந்த இதழில்...*


03 ✦ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 3 சேமிப்புக் கிடங்குகள் திறந்து வைத்தும் 2 கிடங்கு களுக்கு அடிக்கல் நாட்டியும் 53 நபர் களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார்

09 ✦ திண்டுக்கல் மாவட்டத்தில் நுகர்வோர் தினவிழாவில் மாண்புமிகு அமைச்சர்கள் 2,182 பேருக்கு கடனுதவிகள் வழங்கினார்கள்

13 ✦ மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் கூட்டுறவுத் துறை உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம்

19 ✦ முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, கூட்டுறவுத்துறை சார்பில் மாற்றுத் திறனாளி உறுப்பினர்களுக்கு கடனுதவிகள், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு கடனுதவிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள்

26 ✦ காய்கறி சாகுபடியின் துல்லிய பண்ணையம்

33 ✦ கரிப் பருவத்தில் புதுக்கோட்டை மாவட்டதிற்கேற்ற மிளகு சாகுபடி தொழில்நுட்பங்கள்

# திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,

**01.01.2020 முதல் புதிய வட்டி விகிதம்**

| வட்டி விகிதம் | பொது மக்கள் | மூத்த குடிமக்கள் |
|---|---|---|
| 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 4.10% | 4.10% |
| 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 4.25% | 4.25% |
| 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 6.00% | 6.00% |
| 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 6.50% | 6.75% |
| ஓராண்டும் அதற்கு மேலும் | 7.00% | 7.25% |

*சேமிப்பிற்கு சிறந்த வங்கி!* *சேவைக்கு உகந்த வங்கி !*

**விபரங்களுக்கு:**

தலைமையிடம் மற்றும் திருச்சி, கரூர், பெரம்பலூர், அரியலூர் மாவட்டக் கிளைகளை அணுகவும்.

**தொடர்புக்கு: 0431 2702441, 442, 443**


## அட்டைப்பட விளக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான 15.09.2023 அன்று காஞ்சிபுரம், பச்சையப்பன் ஆடவர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில் 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ. 1000/– வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்து, 13 மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை (ATM Cards ) வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி. எம்.மகாலட்சுமி, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஜி.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே.சுந்தர், திரு. சி.வி.எம்.பி.எழிலரசன், திரு. கு.செல்வப்பெருந்தகை, தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் / முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. நா.முருகானந்தம், இ.ஆ.ப., நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. த.உதயச்சந்திரன், இ.ஆ.ப., கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட சிறப்புப் பணி அலுவலர் திரு. க.இளம்பகவத், இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கலைச்செல்வி மோகன், இ.ஆ.ப., காஞ்சிபுரம் மண்டல இணைப்பதிவாளர் திருமதி. பா.ஜெயஸ்ரீ, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 3 சேமிப்புக் கிடங்குகள் திறந்து வைத்தும் 2 கிடங்குகளுக்கு அடிக்கல் நாட்டியும் 53 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கினார்




**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 7.9.2023 அன்று தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில் புதுக்கோட்டை, இராணிப்பேட்டை மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் ரூ. 7.20 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள மூன்று கிடங்குகளைத் திறந்து வைத்து, திருப்பூர் மற்றும் திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் ரூ. 6.40 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 2 கிடங்குகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மேலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரிந்து பணிக்

காலத்தில் உயிரிழந்த 53 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

அதன் விவரம் பின்வருமாறு :

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், அறிவியல் முறையில் சிறந்த கட்டுமானத்தை ஏற்படுத்தி வேளாண் பொருட்களின் தரம் மற்றும் அளவினைப் பாதுகாத்திடும் பொருட்டு விவசாயிகள் மற்றும் விவசாயத்தைச் சார்ந்த வர்த்தக நிறுவனங்களும் பயன்பெறும் வகையில் தோற்றுவிக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் முறையே 50 விழுக்காடு பங்கு கொண்ட இரு பங்குதாரர்கள் ஆவர். தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 60 இடங்களில் 269 கிடங்குகளுடன் செயல்பட்டு வருகிறது.

இந்நிறுவனக் கிடங்குகளில், விவசாயிகள், வியாபாரிகளின் விவசாய விளைபொருட்கள், விதைகள், உரங்கள் சேமித்து வைக்கப்பட்டு அதற்கான ரசீது (Warehouse Receipt) வழங்கப் படுகிறது.

மேலும், அரசு நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களால் சேமிக்கப்படும் பொருட்களையும் இருப்பில் வைத்துச் செயல்பட்டு வருகிறது.

**கூடுதலாக 3400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிட்டங்கி**

2021–22ஆம் ஆண்டிற்கான உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கையில், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில் புதுக்கோட்டை மாவட்டத்தில் கூடுதலாக 3400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிட்டங்கி நிறுவப்படும் என்றும், 2022–2023ஆம் ஆண்டிற்கான உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கையில், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில் இராணிப்பேட்டை மற்றும் திருமங்கலம் சேமிப்புக் கிடங்கு வளாகங்களில் காலியாகவுள்ள இடத்தில் கூடுதலாக 3400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட புதிய சேமிப்புக் கிடங்குகள் கட்டப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில் புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை வட்டம், திருவப்பூரில் ரூ. 2.80 கோடி செலவில் 3400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 1 கிடங்கு, இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டம், சிப்காட் தொழிற்பேட்டை வளாகத்தில் ரூ. 2.20 கோடி செலவில் 3400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 1 கிடங்கு மற்றும் மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், கப்பலூர் சிப்காட் தொழிற்பேட்டை வளாகத்தில் ரூ. 2.20 கோடி செலவில் 3400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 1 கிடங்கு, என மொத்தம் ரூ. 7.20 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள மூன்று கிடங்குகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 7.9.2023 அன்று திறந்து வைத்தார்.

மேலும், திருப்பூர் மாவட்டம் பல்லடம் மற்றும் திருப்பத்தூர் மாவட்டம் குனிச்சி ஆகிய இடங்களில் மொத்தம் ரூ. 6.40 கோடி மதிப்பீட்டில் தலா 3400 மெட்ரிக் டன் கொள்ளளவுடன் கட்டப்படவுள்ள இரண்டு சேமிப்புக் கிடங்குகள் கட்டும் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த 53 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, முதலமைச்சர் அவர்கள் 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி அவர்கள், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் திரு. ப.ரங்க நாதன், தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா,இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் முனைவர் டி.ஜகந்நாதன், இ.ஆ.ப., தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. சு.பழனிசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் திரு. ஆ.அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். ◆

*சேமிக்க சிறந்த வங்கி !* *பாரம்பரியமிக்க வங்கி!*

# புதுக்கோட்டை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி லிட்.,

புதுக்கோட்டை

## 102 ஆண்டுகளைக் கடந்து மக்கள் சேவையில்

**நமது வங்கியானது 68ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் தமிழ்நாடு மாநில அளவில் சிறந்த வங்கியாக தேர்வு செய்யப்பட்டு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் விருது வழங்கப்பட்டது.**

**2019 – 20 ஆண்டிற்கான சிறந்த செயல்பாடு மற்றும் வளர்ச்சிக்கான விருது நபார்டு வங்கியின் மூலம் பெறப்பட்டது.**

**புதுக்கோட்டை மாவட்ட அளவில் அதிக மகளிர் சுய உதவிக் குழு கடன் வழங்கியதற்கான விருது மாவட்ட ஆட்சியர் மூலம் பெறப்பட்டது.**

**வங்கியின் மூலம் வழங்கப்படும் சேவைகள்**

- மைய வங்கியில் சேவை (CBS)
- ஏ.டி.எம். சேவை (ATM Debit Card & KCC Card)
- குறுந்தகவல் சேவை (SMS)
- துரித பணப்பரிமாற்ற சேவை (RTGS/NEFT)
- செல்லிடை வங்கிச் சேவை (Mobile Banking)
- மைக்ரோ ஏ.டி.எம். வங்கிச் சேவை (Micro ATM)
- நடமாடும் ஏ.டி.எம். வாகன சேவை (Mobile Van ATM )
- பொது மக்களின் மதிப்புமிக்க பொருட்களின் பாதுகாப்பிற்கு தனிநபர் பாதுகாப்பு பெட்டக (Locker) வசதி
- அரசின் அனைத்து மானியங்களும் பெறும் இணையதள வசதி
- அடமான நகைகளுக்கு முழு பாதுகாப்பு மற்றும் காப்பீடு வசதி

**தனிநபர் நகைக்கடன் 5 நிமிடத்தில் மாலை 4 மணி வரை, அதிகபட்ச கடன் ரூ. 20.00 இலட்சம், குறைந்த வட்டியில்**

| வைப்புகளுக்கு (Deposits) வழங்கப்படும் வட்டி | |
|---|---|
| பொதுமக்களுக்கு | மூத்தகுடி மக்களுக்கு |
| 6.50% | 7.00% |

## கடன் சேவைகள்

- சுயஉதவிக்குழு கடன்
- மாற்றுத்திறனாளிகளுக்கான கடன்
- சிறுவணிகக் கடன்
- மகளிர் தொழில் முனைவோர் கடன்
- வீடு அடமானக்கடன்
- வீட்டு வசதிக்கடன்
- பணிபுரியும் மகளிர் கடன்
- தனிநபர் சம்பளக்கடன்
- பண்ணை சாராக்கடன்
- MSME கடன்
- கைம்பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான கடன்
- டாப்செட்கோ கடன்
- டாம்கோ கடன்
- தாட்கோ கடன்
- அரசின் பல்வேறு திட்டக்கடன்
- பயிர்க் காப்பீட்டுத் திட்டம் (PMFBY)
- பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா திட்டம் (PMSBY)
- பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா திட்டம் (PMJJBY)

வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சிக்காக விவசாயிகளுக்கு 0% வட்டியில்
பயிர்க்கடன் மற்றும் குறைந்த வட்டியில் மத்திய காலக் கடன்கள்

**“வாடிக்கையாளர்களின் நேசமிகு துரித சேவையே வங்கியின் நோக்கம்”**
**இன்றே அணுகுவீர் !! வங்கியின் தலைமை அலுவலகம் மற்றும் 27 கிளைகள்**

இணைப்பதிவாளர்/செயலட்சியர்

# திண்டுக்கல் மாவட்டத்தில் நுகர்வோர் தினவிழாவில் மாண்புமிகு அமைச்சர்கள் 2,182 பேருக்கு கடனுதவிகள் வழங்கினார்கள்



மாநில அளவில் தேசிய நுகர்வோர் தினம் மற்றும் உலக நுகர்வோர் உரிமைகள் தினவிழா, திண்டுக்கல்லில் தனியார் திருமண மண்டபத்தில் 7.9.2023 அன்று நடைபெற்றது. இவ்விழாவிற்கு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைச் செயலாளர் முனைவர் டி.ஜகந்நாதன், இ.ஆ.ப., தலைமை தாங்கினார். மாவட்ட ஆட்சியர் திருமதி. பூங்கொடி, இ.ஆ.ப., வரவேற்றார். திரு. வேலுச்சாமி எம்.பி. உணவுப் பொருள் வழங்கல் துறை ஆணையர் திரு. பூஜாகுல்கர்னி, இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மரு. ந.சுப்பையன், இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இவ்விழாவில், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. இ.பெரிய சாமி அவர்கள், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. அர.சக்கரபாணி அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு, தேசிய நுகர்வோர் தின போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி மாணவர்கள், சிறப்பாக பணியாற்றிய நியாயவிலைக் கடை பணியாளர்களுக்கு பரிசுத் தொகை

வழங்கினார்கள். மேலும், 2 ஆயிரத்து 182 பேருக்கு ரூ.14.56 கோடி மதிப்பில் கடனுதவிகளையும் அவர்கள் வழங்கினார்கள்.

இவ்விழாவில், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. இ.பெரியசாமி அவர்கள் பேசுகையில், "தமிழகத்தில் எல்லோருக்கும் 'எல்லாம்' என்ற நல்லெண்ணத்துடன் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. பொது விநியோகத்திட்டத்தில் கோடி மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் சென்றடை கிறது. நியாயவிலைக் கடைகளில் அரிசி, பருப்பு, எண்ணெய் உட்பட அனைத்தும் தரமாக வழங்கப்படுகிறது. கொரோனா காலத்திலும் கூட்டுறவுத் துறை பணியாளர்கள் சிறப்பாக செயல்பட்டனர். மேலும் கூட்டுறவுத் துறையை பன்முக தன்மையோடு செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நுகர்வோர்களை பாதுகாக்கவும் குறைகளை தீர்க்கவும் தமிழக அரசு தனிக்கவனம் செலுத்துகிறது" என்றார்.

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. அர.சக்கரபாணி அவர்கள் பேசுகையில்,

"தமிழகத்தில் திமுக ஆட்சிக்கு வந்த பின்னர் மாநில அளவில் 3 ஆயிரத்து 105 நுகர்வோர் வழக்கு களுக்கும், மாவட்ட அளவில் 12 ஆயிரத்து 861 வழக்குகளுக்கும் தீர்வு காணப்பட்டது. இதேபோல் புதிதாக 15,06,189 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. கைரேகை பதிவுகள் மூலம் பொருட்கள் வாங்குவதில் சிரமம் இருப்பதை தவிர்க்க கருவிழி பதிவு மூலம் பொருட்கள் வழங்கும் முறை 2 மாதத்தில் செயல்பாட்டுக்கு வரும். மேலும் நியாயவிலைக் கடைக்கு வர இயலாத 3½ இலட்சம் பேருக்கு வேறு நபரை நியமித்து பொருட்கள் வழங்கப் பட்டுள்ளன. தமிழக முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தில் 31 ஆயிரம் பள்ளிகளில் உணவு வழங்கப்பட்டு வருகிறது. மாணவர்கள் விழிப்புணர்வு பெற்று நுகர்வோராக மாற வேண்டும்" என்றார்.

இவ்விழாவில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் பேசுகையில் "தமிழகத்தில் பொதுமக்களின் உரிமைகளை பாதுகாக்க நுகர்வோர்

ஆணையங்கள் செயல்படுகின்றன. பொதுமக்கள் பொருட்களை வாங்கும்போது தயாரிப்பு தேதி, காலாவதி தேதி, விலை ஆகியவற்றை சரிபார்க்க வேண்டும். ஏதேனும் முறைகேடுகள் இருந்தால் உடனே ஆணையத்தில் புகார் அளிக்கவேண்டும். கூட்டுறவுத்துறை மூலம் கூட்டுறவு அங்காடிகள், பண்ணைப் பசுமை காய்கறி கடைகள் மற்றும் கூட்டுறவு சந்தை எனும் செயலி செயல்பாட்டில் உள்ளன'' என்றார்.

மேலும், இவ்விழாவில் அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டு இருந்தன. அதை மாண்புமிகு அமைச்சர்கள், அதிகாரிகள், மாணவர்கள் பார்வையிட்டனர். இவ்விழாவில் திரு. காந்திராஜன், எம்.எல்.ஏ., மேயர் திரு. இளமதி, துணைமேயர் திரு.ராஜப்பா, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திரு. பாஸ்கரன், துணைத்தலைவர் திரு.பொன்ராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சேக்முகைதீன், மண்டல இணைப்பதிவாளர் திரு.காந்திநாதன், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு. சிவக்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர். ◆

அமோக விளைச்சலை அள்ளித்தருமே

கிரிப்கோ குருணை யூரியா




கிரிஷக் பாரதி கோவாப்பரேட்டிவ் லிமிடெட்.

KRIBHCO

அறை எண். 1, 2 & 3, ஆயத்த ஆடை வளாகம்,
திரு.வி.க.தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை– 600 032.

# மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,

MDCC BANK Ltd MADURAI
M.D.C.C BANK Ltd



187, வடக்கு வெளி வீதி, மதுரை - 625 001.

தொலைபேசி எண் : 0452 - 2342051 முதல் 2342054 Fax : 0452 - 2345747
mdccbank@rocketmail.com, Post Box No. : 14
E-mail : mdccbank@rocketmail.com

## மக்கள் சேவையில் 112 ஆண்டுகள்

மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் 44 கிளைகளுடன் பொது மக்களின் பேராதரவால் ஒரு நூற்றாண்டைக் கடந்து சீரும் சிறப்புடன் செயல்பட்டு சேவை செய்து வருகின்றது

**வங்கியின் வைப்புத் தொகை : ரூ. 163692.18 இலட்சம்**
**வங்கி வழங்கியுள்ள கடன் தொகை : ரூ. 217508.62 இலட்சம்**

### வாடிக்கையாளர்களின் வைப்புத் தொகைகளுக்கு வங்கி வழங்கும் வட்டி விகிதம்

| | |
|---|---|
| சேமிப்பு கணக்கு (தினசரி நிலுவைக்கு) | 3.00% |
| கால வைப்புகள் | |
| 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 4.50% |
| 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 5.00% |
| 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 5.50% |
| 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 6.50% |
| 12 மாதங்கள் முதல் 24 மாதங்கள் வரை | 7.25% |

**60 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் இட்டு வைக்கும் வைப்புகளுக்கு கூடுதல் வட்டி 0.50% வழங்கப்படுகிறது.**

### வங்கி கிளைகள் மூலம் வழங்கப்படும் கடன்கள்

* தனி நபருக்கு ரூ. 20.00 இலட்சம் வரை மிகக் குறைந்த வட்டியில் நகைக்கடன்
* புதிதாக வீடு கட்டுவதற்கான கடன் மற்றும் வீட்டு அடமானத்தின் பேரில் அடமானக் கடன்
* தொழில் முனைவோருக்கான கடன்
* சிறு வணிகக் கடன் மற்றும் சிறு வணிக கூட்டுப்பொறுப்புக் குழுக் கடன்
* விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த கடன்கள்
* மகளிர் சுய உதவிக் குழுக் கடன்
* பணிபுரியும் மகளிருக்கு கடன்
* கிளைகள் மூலம் மத்திய கால முதலீட்டுக் கடன்
* மாற்றுத்திறனாளிகளுக்கான கடன்
* MSME சிறுத் தொழில் உரிமையாளர்கள் / பங்குதாரர் நிறுவனங்கள்/ கம்பெனிகள் மற்றும் கூட்டுக் குழுக்களுக்குக் கடன்

இது போன்ற பலவகையான கடன்கள் வழங்கப்படுகின்றது. மேலும் விபரங்கள் தெரிந்து கொள்ள மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமை அலுவலகம் மற்றும் 44 கிளைகளை தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்கிறோம்.

**மேலும் வாடிக்கையாளர்களுக்கு**

* **குறைந்த வாடகையில் பாதுகாப்பு பெட்டக வசதி**
* **ATM (தானியங்கி பணம் கொடுக்கும் இயந்திரம்) வசதி**
* **RTGS & NEFT வசதி உள்ளது.**
* **அலைபேசி வங்கியியல் சேவை** (Mobile Banking Service)
* **விரைவில் இணையதள வங்கி சேவை** (Net Banking Facility)

**செயல்பாட்டில் உள்ள வங்கியின் புதிய திட்டம்**

சிறுவர் / சிறுமியர்களுக்கான கண்மணி சேமிப்பு திட்டம். இத்திட்டத்திற்கு சாதாரண சேமிப்புக்கு வழங்கப்படும் வட்டியைக் காட்டிலும் கூடுதலாக 1% சேர்த்து 4% வட்டி வழங்கப்படும்.

**"இன்றைய சேமிப்பு ! நாளைய பாதுகாப்பு"**
**"கூட்டுறவு வங்கியில் சேமிப்பீர் வாழ்வை வளமாக்குவீர்"**

இணைப்பதிவாளர் / செயலட்சியர்

# மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தலைமையில் கூட்டுறவுத் துறை உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம்






**மா**ண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் தலைமையில், 20.09.2023 அன்று தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலகத்தில், கூடுதல் பதிவாளர்கள், அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் செயலாட்சியர்கள் ஆகியோர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்காக கூட்டுறவு வங்கிகளில் புதிதாக சேமிப்பு கணக்கு துவங்கப்பட்ட விவரம், கூட்டுறவுத் துறை அறிவிப்புகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கைகள், புதிய உறுப்பினர் சேர்க்கை, பயிர்க்கடன்கள் வழங்கிய விவரம், பயிர்க்கடன் மற்றும் கால்நடை பராமரிப்பு கடன் வழங்குதலில் முன்னேற்றம், கூட்டுறவுச் சங்கங்களில் வைப்புத் தொகை, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை பல்நோக்கு சேவை மையங்களாக உருவாக்குதல், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் தணிக்கை முன்னேற்றம், குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார். மேலும், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி செயல்பாடுகள், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் செயல்பாடுகள், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் செயல்பாடுகள், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் செயல்பாடுகள், நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகளின் கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனை முன்னேற்றம், பிரதம கூட்டுறவு பண்டகசாலைகளில் சில்லரை விற்பனை முன்னேற்றம், கூட்டுறவு மருந்தகங்கள், நியாயவிலைக் கடைகள் ஆய்வு மற்றும் கண்டறியப்பட்ட முறைகேடுத் தொகை, நியாயவிலைக் கடைகளில் UPI வசதி ரொக்கமற்ற பணப்பரிவர்த்தனை குறித்தான முன்னேற்றம், நியாய விலைக்கடைகளுக்கு ISO 9001:2015 மற்றும் ISO 28000:2007 ஆகிய பன்னாட்டு தர நிர்ணய சான்று பெறுதல் குறித்தான முன்னேற்றம், காலிக்கோணிகள் விற்பனை மற்றும் நிலுவை விவரம், வாடகைக் கட்டடங்களில் இயங்கும் நியாயவிலைக் கடைகளுக்கு சொந்த கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட விவரம் மற்றும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட நியாயவிலைக் கடைகளுக்கான கட்டடங்களின் கட்டுமான நிலை குறித்த முன்னேற்றம், நியாயவிலைக் கடைகளில் 2கி.கி / 5கி.கி எரிவாயு (FTL) உருளைகள் விற்பனை விவரம், பனைவெல்லம் தேவைப்பட்டியல், கொள்முதல் மற்றும் விற்பனை, சிறுதானியம் தேவைப்பட்டியல் கொள்முதல் மற்றும் விற்பனை (சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்கள் மட்டும்), தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை மற்றும் கழகத்திடமிருந்து வரவேண்டிய நிலுவைத் தொகை விவரம்,

வேளாண் விளைபொருட்கள் விற்பனை, கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகள், கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தில் கிடங்குகளை பதிவு செய்தல் / eNWR issue / தானிய ஈட்டுக் கடன், மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய பணிகளின் முன்னேற்றம், நீதிமன்ற வழக்குகளில் எதிர் வாதுரை (Counter Affidavit) தாக்கல் செய்யப்படவேண்டிய இனங்கள் குறித்த விவரம், நீதிமன்ற தீர்ப்பில் கால நிர்ணயம் செய்து வழங்கப்பட்ட ஆணைகள் மீது நிலுவையில் உள்ள நடவடிக்கைகள் குறித்த விவரம், நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் நிலுவை விவரம், குறித்து கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டார். மேலும், கூட்டுறவுத்துறையின் சார்பில் நடைபெறும் பணிகளை தொய்வின்றி, விரைந்து முடிக்கவும் அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

பின்னர், மாநில அளவில் சிறப்பாகச் செயல்பட்டு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்காக அதிக அளவில் புதிதாக சேமிப்பு கணக்குகள் துவங்கியமைக்காக திண்டுக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் இணைப்பதிவாளர் / செயலாட்சியர் உள்ளிட்ட குழுவினருக்கும் மற்றும் 01.04.2023 முதல் 31.08.2023 வரை அதிக கடன், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் செயல்பாடுகளில் சிறப்பாகச் செயல்பட்டது, அதிக சேமிப்பு கணக்கு துவங்கியது, அதிக சங்கங்களை லாபத்தில் செயல்பட வைத்தது, அரசின் அறிவிப்புகளை விரைவாக செயல்படுத்திய சட்டப்பூர்வ இனங்களில் உரிய காலத்தில் நடவடிக்கை எடுத்தது உள்ளிட்ட அனைத்து வகையிலும் சிறப்பாகச் செயல்பட்டமைக்காக அரியலூர் மற்றும் ஈரோடு மண்டல இணைப்பதிவாளர்களை பாராட்டி பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசுகளை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் வழங்கினார்.

மேலும், சென்னை மத்திய கூட்டுறவு வங்கியின் பெரியார் நகர் கிளையில் உதவி மேலாளாராக பணிபுரிந்த திரு.செ.சின்னசாமி (லேட்) அவர்களின் மகள் செல்வி. சி.சிவசெல்விக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணையினை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் வழங்கினார்.

பின்னர், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே.ஆர்.பெரிய கருப்பன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது :

மக்களுக்குச் சேவை செய்கின்ற துறையாக, குறிப்பாக தமிழ்நாட்டில் இருக்கின்ற எந்த ஒரு சாமானிய மக்களும் இந்த துறையின் மூலம் பயனடையாதோர் இல்லை அல்லது எந்த ஒரு சேவையையோ பெறாதவர்கள் இல்லை என்று சொல்ல கூடிய அளவிற்கு அனைத்து இல்லங் களுக்கும், அனைத்து மக்களுக்கும் சேவை செய்கின்ற துறையாக இந்த துறை விளங்குகிறது. அது குடிமைப்பொருட்கள் வழங்குவதாக இருந்தாலும் சரி, அல்லது அரசின் சார்பில் முதலமைச்சர் அவ்வப் போது அறிவிக்கின்ற சிறப்பு திட்டங்களை மக்களிடத்தில் கொண்டுபோய் சேர்ப்பதாக இருந்தாலும் சரி, அதேபோல வங்கிகளை இணைத்து ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்கும், விவசாயிகளுக்கும், சிறு தொழில் செய்வோர்களுக்கும், கைம்பெண்கள், கணவரால் கைவிடப் பட்டவர்கள் என்று பாதிக்கப்பட்ட நலிந்த பிரிவினருக்கு பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான திட்டங்களுக்கு தேவையான நிதிகளை ஒதுக்கி, அவர்களுக்கு அதனை வழங்கி, அவர்களை பொருளாதார ரீதியிலாக உயர்த்துகின்ற பெரும்பங்கு இந்த கூட்டுறவுத் துறைக்கு இருக்கின்றது.

அதேபோல, கூட்டுறவுச் சங்கங்கள் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மூலமாக இயங்குகின்ற துறையாகவும் இத்துறை இருக்கின்றது. புதிதாக இத்துறையின் மூலம் பயிற்சி தருகின்ற கல்வி நிலையங்களும் மாவட்ட வாரியாக இயங்கி வருகிறது. இப்படி பன்முகத் திறமை கொண்டது இந்த கூட்டுறவுத்துறை. சமீபத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தை செயல்படுத்துவதில் முதலமைச்சர் அவர்களின் பாராட்டு களையும் இத்துறையின் கூட்டுறவு வங்கிகள் பெற்றிருக்கிறது.


இத்திட்டத்தின் மூலம் புதிதாக 9 லட்சத்து 91 ஆயிரம் புதிய வங்கி கணக்குகள் கூட்டுறவு வங்கிகளுக்கு கிடைத்துள்ளது மகிழ்ச்சியான செய்தி. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு இணையாகவும், அதை விட கூடுதலாகவும் இந்த கூட்டுறவு வங்கிகள் மக்களுக்கு சேவைகளை வழங்கியிருப்பது பாராட்டுதலுக்குரியது. கூட்டுறவு

சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்தி மக்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதும் இத்துறையின் பணியாகும்.

படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கித் தர வேண்டும் என்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எண்ணத்தினை நிறைவேற்றும் வகையில், விற்பனையாளர்கள், கட்டுநர்கள் என 6,500 காலிப்பணியிடங்களுக்கு அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, சுமார் 4,50,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அதில் 3,50,000 விண்ணப்பதாரர்களுக்கு நேர்காணல் நடத்தப்பட்டு, அதில் 24 மாவட்டங்களுக்கான முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மாவட்டங்களுக்கான தேர்வுப் பட்டியல் விரைவில் வெளியிடப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம் கூட்டுறவுத் துறையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், இத்துறையின் செயல்பாடுகள் திருப்திகர மாக உள்ளது. இருந்தாலும் இன்னும் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் நமது அலுவலர்களுக்கு நானும், செயலாளர் அவர்களும், பதிவாளர் அவர்களும் வழங்கி உள்ளோம். இன்றைய காலக்கட்டத்தில் வங்கி சேவை என்பது போட்டிகள் நிறைந்த உலகமாக உள்ளது. அதிலே நவீன மயமாக்கும் பணிகளையும் சிறப்பாக முன்னெடுத்து வந்துள்ளோம். இன்னும் மூன்று அல்லது நான்கு மாத காலங்களுக்குள் எல்லா வங்கிகளுக்கு இணையான சேவையினை வழங்கி, வாடிக்கையாளர்களின் நன்மதிப்பை பெறக்கூடிய வங்கிச் சேவையை இத்துறையின் மூலம் வழங்க முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.

இக்கூட்டத்தில் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் முனைவர் டி.ஜகந்நாதன், இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மரு. ந.சுப்பையன், இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) திருமதி. ஜெ.விஜயராணி, இ.ஆ.ப., சிறப்புபணி அலுவலர் (தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி), திரு.எம்.பி.சிவன்அருள், இ.ஆ.ப., (ஓய்வு) ஆகியோர் முன்னிலை வகித்தனர். அனைத்து கூடுதல் பதிவாளர்கள், அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள், மத்திய கூட்டுறவு வங்கிகளின் செயலாட்சியர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். ✤



துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் (வரை)
THE TUDIYALUR CO-OPERATIVE AGRICULTURAL SERVICES LIMITED. NO. K. 1550
டியூகாஸ் பூச்சிக்கொல்லி மருந்துகள்
கோவை விதைகள்
ஒரே கூரையின் கீழ் அனைத்து இடுபொருட்களும்
TUCAS
விவசாய உபகரணக்கருவிகள்
வங்கிப் பணிகள்
அசோகா மார்க் கலப்பு உரங்கள் பயன்படுத்திய பயிர்கள்
அசோகா மார்க் கலப்பு உரங்கள்
Tudiyalur Post, Coimbatore - 641 034, TAMILNADU, INDIA
Phone : +91 0422 2642322, +91 0422-2642722, Fax: +91 0422-2642833
Email : tucas_1955@yahoo.co.in, info@tucas.org
Website : www.tucas.org

# முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, கூட்டுறவுத்துறை சார்பில் மாற்றுத்திறனாளி உறுப்பினர்களுக்கு கடனுதவிகள், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு கடனுதவிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள்



முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, கூட்டுறவுத்துறை சார்பில் 100 மாற்றுத்திறனாளி உறுப்பினர்களுக்கு கடனுதவிகள், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு கடனுதவிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 9.9.2023 அன்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கலைச்செல்வி மோகன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில், கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் திருமதி.பா. ஜெயஸ்ரீ வரவேற்புரையாற்றினார்.

திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.ஆர்.பாலு அவர்கள், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.க.செல்வம், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.க.சுந்தர், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.சி.வி.எம்.பி. எழிலரசன், திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.கு.செல்வப்பெருந்தகை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் மாற்றுத்திறனாளிகள், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு கடனுதவிகள் மற்றும் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி விழாப் பேரூரையாற்றினார்.

இவ்விழாவில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாற்றுதிறனாளிக் கடன்களாக 100 பயனாளிகளுக்கு ரூ. 37.00 இலட்சம், மகளிர் சுய உதவிக்குழுக் கடனாக 53 குழுக்களின் 666 மகளிருக்கு ரூ. 4.20 இலட்சம், மகளிர் தொழில் முனைவோர் கடனாக 4 பயனாளிகளுக்கு ரூ. 2.00 இலட்சம், கணவனால் கைவிடப்பட்ட மகளிருக்கான கடனாக 2 பயனாளி களுக்கு ரூ. 1.00 இலட்சம், டாம்கோ கடனாக 6 பயனாளிகளுக்கு ரூ. 3.00 இலட்சம், முத்ராக் கடனாக 28 பயனாளிகளுக்கு ரூ. 14.00 இலட்சம், இதர கடனாக 12 பயனாளிகளுக்கு ரூ. 63.50 இலட்சம் என மொத்தம் 838 பயனாளிகளுக்கு ரூ. 5.40 கோடிக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.



**"விவேகம்" என்னும்**
**வெள்ளி முளைத்து**

**"சாதி மதப்பித்து"**
**என்னும் சனி**
**தொலைந்தால்தான்**

**"சமத்துவம்" என்னும்**
**ஞாயிறு பிறக்கும்"**

**– முத்தமிழறிஞர் கலைஞர்**

இவ்விழாவில், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் திரு.படப்பை. ஆ.மனோகரன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி.மகாலட்சுமி யுவராஜ், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் துணைத்தலைவர் திருமதி.நித்தியா சுகுமார், காஞ்சிபுரம் மாநகராட்சி துணை மேயர் திரு.குமரகுருநாதன், காஞ்சிபுரம் ஒன்றியக் குழுத்தலைவர் திருமதி.மலர்கொடி சுகுமார் ஆகியோ வாழ்த்துரை வழங்கினார்கள்.

இவ்விழாவிற்கு வருகை தந்த அனைத்து பிரமுகர்களுக்கும் காஞ்சிபுரம் சரக கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் (பொறுப்பு) திருமதி. தே. சித்ரா நன்றியுரை ஆற்றினார். ✤



விருதுநகர் மாவட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் உள்ள நியாய விலைக் கடைகளில் க்யூ ஆர் கோடு இயந்திரம் மூலம் பண பரிவர்த்தனை மேற்கொள்ள உரிய கருவிகளை கூடுதல் பதிவாளர் டாக்டர். ந. வில்வசேகரன் 28.8.2023 அன்று வழங்கினார். உடன், மண்டல இணைப்பதிவாளர் திரு பா.செந்தில் குமார், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் செயலாட்சியர் திருமதி. ப்பி.ராஜலஷ்மி, அருப்புக் கோட்டை சரகத் துணைப்பதிவாளர் திரு சு.ரவிச்சந்திரன், ஸ்ரீவில்லிபுத்தூர் சரகத் துணைப்பதிவாளர் திரு மீ.வீரபாண்டி, பொது விநியோகத் திட்ட துணைப்பதிவாளர் திரு பெ.முருகவேல் மற்றும் பலர் உள்ளனர்.




தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் மூலம் உறுப்பினர் கல்வித் திட்டம் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கடன் வழங்கும் விழா தஞ்சாவூர் சரகம் பூதலூர் வட்டம் செங்கிப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 19.8.2023 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், தஞ்சாவூர் மண்டல இணைப்பதிவாளர் திருமதி. சி. தமிழ் நங்கை தலைமையேற்று பேசி, 7 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.44 லட்சம் குழுக் கடன்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் செயலாட்சியர் திரு.பன்னீர் செல்வம், கூட்டுறவு சார்பதிவாளர்/ கள அலுவலர் திருமதி சந்தியாஸ்ரீ, சங்கத்தின் செயலாட்சியர் திரு.நிஜந்தன் மற்றும் தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி கள மேலாளர் திரு.ஓம்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டுறவே ! நாட்டுயர்வு !

# சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி லிமிடெட்

SDCCB
வளர்ந்து வரும் வங்கி

சேரி ரோடு, சேலம் – 636001, தொலைபேசி எண்: 0427 – 2451761–765
Email : slm_sdccbslm@yahoo.co.in & devtsdccb@gmail.com
Website : www.salemdccbank.com

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக மிகச்சிறந்த சேவை புரிந்ததற்காக எட்டு முறை தங்கப்பதக்கமும், பாராட்டுப் பத்திரமும் பெற்ற வங்கி

**மிகக் குறைந்த வட்டியில் வழங்கும் கடன்கள் விவரம்**

| | | |
|---|---|---|
| தனி நபர் நகைக்கடன் | ₹ 10.00 இலட்சம் வரை | 8.50% |
| | ₹ 1000001 முதல் ₹ 20.00 இலட்சம் வரை | 10.50% |
| புதிய வீடு கட்ட கடன் | ₹ 30.00 இலட்சம் வரை | 9.00% |
| வீடு அடமானக் கடன் | ₹ 20.00 இலட்சம் வரை | 10.00% |

| இட்டுவைப்புக் காலம் | வட்டி விகிதம் | |
|---|---|---|
| | பொதுமக்களுக்கு | மூத்த குடிமக்களுக்கு |
| 1 முதல் 2 வருடங்கள் வரையிலான இட்டுவைப்புகளுக்கு | 6.50% | 7.00% |

## வங்கியின் சிறப்பு அம்சங்கள்

- 115 ஆண்டுகளாகத் தொடர்ந்து இலாபத்தில் இயங்கிவரும் வங்கி.
- சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் 74 கிளைகளில் வங்கியியல் சேவை.
- ரூ.4200 கோடிக்குமேல் இட்டுவைப்பு.
- நடைமுறை மூலதனம்ரூ.5724.31 கோடிக்குமேல்
- நவீனமயமாக்கப்பட்ட கிளைகள்.
- ஏ.டி.எம். சேவை.
- RTGS & NEFT மற்றும் Mobile Banking, IMPS, Gpay, Whatsapp pay, UPI, Phone Pay வசதிகள்.
- Micro ATM மூலம் AePS முறையில் பணம் செலுத்துதல் மற்றும் பெறும் வசதி. இதர வங்கி ATM Card மூலம் பணம் பெறும் வசதி.
- குறைந்த வாடகையில் பாதுகாப்புப் பெட்டக வசதி.
- சேமிப்புக் கணக்குகள் துவங்குவதில் விரைவான சேவை.
- பள்ளி மாணவர்களுக்கு சேமிப்பு கணக்கு சேவை (SSS SB A/C).
- PMSBY/PMJJBY காப்பீட்டுத் திட்ட வசதி.
- விரைவான நகைக் கடன் வசதி.
- மகளிர் / ஆடவர் சிறுவணிகக் கடன்.
- நுகர்வோர் கடன்.
- இருசக்கர வாகனக் கடன்.
- மாற்றுத்திறனாளிகள் கடன்.
- மகளிர் தொழில் முனைவோர் கடன்.
- மகளிர் சுய உதவிக் குழுக் கடன்.
- பணிபுரியும் மகளிருக்கான கடன்.
- கூட்டுப் பொறுப்புக்குழுக் கடன்.
- சம்பளக்கடன்.
- மத்திய கால விவசாயக் கடன் (MT Agri Loan)
- சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கான கடன் (MSME Loan)
- அரசு நலத்திட்டங்களின்கீழ் வரும் டாம்கோ, டாப்செட்கோ, தாட்கோ கடன்.
- ஆதரவற்ற மகளிர் / விதவை கடன்.
- கல்விக் கடன்.

**கூடுதல் பதிவாளர் / செயலாட்சியர்**




மாண்புமிகு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்கள் 15.9.2023 அன்று திருவண்ணாமலை மாவட்டம், தச்சம்பட்டில் நடைபெற்ற விழாவில் மகளிர்களுக்கு மாதந்தோறும் ரூ. 1000/– வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்து, மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு. கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பா.முருகேஷ், இ.ஆ.ப., திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. மு.பெ.கிரி, திரு. எஸ்.அம்பேத்குமார், திரு. பெ.சு.தி.சரவணன், திரு. ஒ.ஜோதி, மாநில தடகள சங்க துணைத்தலைவர் மரு. எ.வ.வே.கம்பன், இயக்குநர், செய்யார் கூட்டுறவு சர்க்கரை ஆலை திரு. எம்.எஸ்.தரணிவேந்தன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு. செ.ஆ.ரிஷப், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் மரு. மு.பிரியதர்ஷினி, மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் திருமதி. பார்வரி சீனிவாசன், திருவண்ணாமலை ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி. கலைவாணி கலைமணி, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மகளிருக்கு மாதந்தோறும் ரூ. 1000/– வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, திருச்செந்தூர் வட்டம் ஆதித்தனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற அரசு விழாவில், மகளிர்களுக்கு மாதந்தோறும் ரூ. 1000/– பெறுவதற்கான வங்கி பற்று அட்டையினை தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. கனிமொழி கருணாநிதி மற்றும் மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் வழங்கினர். அருகில், மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.சி.சண்முகையா, மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி. அ.பிரம்மசக்தி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.தாக்கரே சுபம் ஞானதேவ ராவ், இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.

# ஆர்.கே.10. விருதுநகர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்., விருதுநகர்

**# 104/1, மதுரை ரோடு, அஞ்சல் பெட்டி எண் : 8, விருதுநகர்**

**தொலைபேசி எண்: (04562) 245815**

Website : www.vrdccbank.in Email : virudhunagardccb@gmail.com

| வ. எண் | இட்டுவைப்பு காலம் | மூத்த குடிமக்கள் அல்லாத வாடிக்கை யாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்படும் வட்டி விகிதம் | மூத்த குடிமக்களுக்கு நிர்ணயம் செய்யப்படும் வட்டிவிகிதம் |
|---|---|---|---|
| 1. | 7 நாட்கள் முதல் 14 நாட்கள் வரை | 3.50% | 3.50% |
| 2. | 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 4.00% | 4.00% |
| 3. | 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 4.50% | 4.50% |
| 4. | 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 5.00% | 5.00% |
| 5. | 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 5.75% | 5.75% |
| 6. | ஒரு வருடம் முதல் 3 வருடங்கள் வரை | 6.25% | 6.75% |
| 7. | 3 வருடத்திற்கு மேல் | 5.75% | 6.25% |

- வைப்புகளுக்கு கூடுதல் வட்டி
- NEFT & RTGS வசதி
- ATM மற்றும் POS வசதி
- Mobile Banking வசதி
- INSTA CARD வசதி
- Micro ATM வசதி
- MSME கடன்
- சம்பளக்கடன்
- குறைந்த வட்டியில் நகைக்கடன்
- தனி நபர் நகைக்காசுக் கடன்
- வீட்டு வசதி மற்றும் வீடு அடமானக்கடன்
- சிறு வணிகக்கடன்
- மாற்றுத்திறனாளிகள் கடன்
- முதலீட்டுக் கடன்கள்
- சுய உதவிக் குழுக்கடன்கள்
- மகளிர் தொழில் முனைவோர் கடன்

இணைப்பதிவாளர் / செயலாட்சியர்

## மதுரை கூட்டுறவு மேலாண்மை பயிற்சி கழகத்தில்

# இந்திய கூட்டுறவு தந்தை சர்.பிரெட்ரிக் நிக்கல்சன் பிறந்தநாள் விழா




இந்திய கூட்டுறவுத்துறையின் தந்தையாக போற்றப்படும் சார் பிரெட்ரிக் நிக்கல்சனின் 178ம் பிறந்தநாள் மதுரை கூட்டுறவு மேலாண்மை பயிற்சிக் கழகத்தில் அனுசரிக்கப்பட்டது. 1869ல் இந்தியாவிற்கு குடிமைப்பணி அதிகாரியாக வருகை தந்த சர். பிரெட்ரிக் நிக்கல்சன் சென்னை மாகாண குடிமைப் பணி அதிகாரியாக பணியைத் துவங்கி அங்குள்ள மக்களின் சமூகப் பொருளாதார நிலைமைகளை நேரடியாக கவனித்து அதில் ஏற்பட்ட சிக்கல்களே பின்னாளில் அவரை கூட்டுறவு இயக்கத்தை வளர்த்தெடுக்க உதவியது. அதீத வட்டிக் கொடுமைகளாலும் வறுமையின் பிடியிலும் தவித்துக்கொண்டிருந்த இந்திய விவசாயிகளின் துயர் தீர்க்கும் விதத்தில் கூட்டுறவு இயக்கத்தை முன்னிறுத்தி வெற்றி கண்ட அவரது இன்றியமையாத சேவையை நினைவு கூறும் வகையில் மதுரை கூட்டுறவு மேலாண்மை பயிற்சிக் கழகத்தில் விழா நடைபெற்றது.

கூட்டுறவு மேலாண்மை பயிற்சிக் கழக விரிவுரையாளர் திரு.ஞா.கதிரவன் வரவேற்றார். இந்நிகழ்ச்சிக்கு மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணைப்பதிவாளர் / முதன்மை வருவாய் அலுவலர் செல்வி.மு.அமிர்தா தலைமை வகித்து சிறப்புரையாற்றினார். சர்.பிரெட்ரிக் நிக்கல்சனின் சேவைகளை விவரிக்கும் வகையில் கூட்டுறவு மேலாண்மை பயிற்சிக் கழக இயக்குநர் இயற்றிய கட்டுரையை வெளியிட அதை மதுரை மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு சார்பதிவாளர்/ செயலாட்சியர் திரு.ம.தீனதயாளன் பெற்றுக்கொண்டார். கூட்டுறவு மேலாண்மை பயிற்சிக் கழக இயக்குநர் முனைவர் ச.தர்மராஜ் சிறப்புரை நிகழ்த்தினார். இறுதியில் விரிவுரையாளர் திருமதி.க.ஜெயந்தி நன்றி கூறினார். இந்நிகழ்ச்சியில், கூட்டுறவு மேலாண்மை பயிற்சிக் கழக விரிவுரையாளர்கள், உயர்நிலை பட்டயப் படிப்பு மாணவர்கள் உள்ளிட்டோர் பலர் கலந்துகொண்டனர்.

# காய்கறி சாகுபடியின் துல்லிய பண்ணையம்

நமது அன்றாட உணவில் காய்கறிகள் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. காய்கறிகளில் வைட்டமின், நார்ச்சத்து மற்றும் தாதுப் பொருள்கள் நிறைந்துள்ளது. நம்நாட்டில் 72 மில்லியன் எக்டர் நிலப்பரப்பில் காய்கறி சாகுபடி செய்யப்பட்டு 130 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஒரு எக்டருக்கு 15.96 டன்கள் காய்கறி உற்பத்தி செய்யப்படுகின்றது. நம்நாடு காய்கறி உற்பத்தியில் இரண்டாம் இடத்தை வகிக்கிறது. நாட்டின் பொருளாதாரம் மற்றும் மக்களின் உடல்நிலை ஆகியவற்றில் காய்கறி சாகுபடி மிக முக்கிய பங்கு வகிக்கிறது. சராசரி இந்தியனுக்கு பரிந்துரைக்கப்படும் ஒரு நாள் காய்கறி தேவை 300 கிராம். ஆனால், அந்த 300 கிராம் அளவு கிடைப்பதில்லை. இதற்கு மிக முக்கிய காரணம் நம் தேவைக்கேற்ப காய்கறி உற்பத்தியும், உற்பத்தித் திறனும் இன்னும் பெருகவில்லை என்பதாகும்.

எனவே, உற்பத்தித் திறனை அதிகரிக்க புதிய தொழில்நுட்பமான துல்லிய பண்ணைய முறையைப் பயன்படுத்தி பயிர் செய்ய வேண்டும்.. மேலும் இவ்விதம் பயிர் செய்யப்படும் காய்கறிப் பயிர்கள் மூலம் கிடைக்கும் மகசூல் தரமுடையதாகவும், அதிக வருமானமுடையதாகவும், குறுகிய காலப் பயிராகவும் இருப்பதால் விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் மேன்மையடையவும் வழிவகுக்கும்.

பெருகிவரும் மக்கள் தொகையின் தேவையை நிறைவேற்ற காய்கறி உற்பத்தியைப் பெருக்க வேண்டும். எனினும் குறைந்துவரும் நிலப்பரப்பில் மற்றும் குறைந்திருக்கும் மண் வளத்தைக் கொண்டு காய்கறி உற்பத்தியை அதிகரிப்பது நமது குறிக்கோளாகும். அதிக மகசூல், குறுகிய பயிர்க்காலம், வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய வாய்ப்புகள், பதப்படுத்துவதற்கு ஏற்ற பயிர், அதிக வருமானம் போன்றவைகளை துல்லிய பண்ணையம் மூலம் பெறமுடியும்.

துல்லிய பண்ணையம் மூலம் சந்தைக்கேற்ப உற்பத்தி முறையினை மாற்றி அமைத்தல், நவீன வேளாண்மை தொழில் நுட்பங்களை உழவர்களுக்குப் பயிற்றுவித்தல், அதிநவீன தொழில்நுட்ப தோட்டக் கலையை துல்லிய வேளாண்மை கூறுகளுடன் மேம்படுத்துதல், காய்கறிப் போன்ற பயிர்களில் அதிகபட்சம் மரபியல் திறனை பயன்படுத்துதல் மற்றும்

தமிழ்நாட்டிற்கு உகந்த அதிநவீன தொழில்நுட்ப மாதிரியை உருவாக்குதல் போன்றவற்றின் மூலம் துல்லிய பண்ணையம் செய்யலாம்.

தமிழ்நாட்டில் பயிரிடப்படும் காய்கறிப் பயிர்களில் தக்காளி, கத்திரி, மிளகாய் மிகவும் முக்கியமானவை. இவ்வகை காய்கறிகளுக்கு எப்போதும் தேவை இருப்பதால் ஆண்டு முழுவதும் பயிரிடப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் மட்டுமின்றி, வெளி மாநிலங்களுக்கும், வெளிநாட்டிற்கும் பச்சை காய்கறிகளாகவோ, பதப்படுத்தப்பட்ட தக்காளி பழக்கூழ், பழத்தூள் மற்றும் பழப் பசையாகவோ ஏற்றுமதி செய்யப்படுகிறது. திருந்திய முறையில் காய்கறிகள் சாகுபடி செய்யும் போது, நல்ல தரமும் மகசூலும் ஓரளவிற்கு மட்டுமே கிடைத்து வருகின்றன. நவீன காய்கறி சாகுபடி தொழில் நுட்பமான துல்லிய பண்ணைய சாகுபடி முறையை கடைப்பிடிப்பதன் மூலம் அதிக மகசூலும், முதல் தரமான காய்கறிகளை அறுவடை செய்வதிலும் சிறிதும் சந்தேகமில்லை.

காய்கறிகள் பலவகையான சத்துகள் அடங்கியவை. முக்கியமாக பூசணி கொடிவகை காய்கறிகள் மிக அதிகமான சத்துகள் மிகுந்ததுடன் மருத்துவ குணங்கள் மிகுந்தவை. மேலும் இவற்றில் நீர்ச்சத்து மிகுந்து இருப்பதால் இவை குறைந்த கலோரி உணவில் அடங்கக் கூடியதாகும். பூசணி, பரங்கி, முலாம்பழம், வெள்ளரி, பாகல், புடல், பீர்க்கன் போன்ற காய்கறிகளை பல வகையான முறையில் உட்கொள்ளலாம். உதாரணமாக பச்சைக் காய்கறியாகவும், சமைத்தும், ஊறுகாய் தயாரித்தும், வற்றலாகவும் உண்ணலாம். மேலும், இவை அதிக உற்பத்தித் திறன் மற்றும் நல்ல இலாபகரமான காய்கறிப் பயிராகவும் கருதக் கூடியவை. மேலும் இவற்றில் பலவகையானவை இந்தியாவிலேயே தோன்றி வந்ததால் நல்ல முறையில் இவற்றைப் பயிர் செய்து வளர்க்க நம்நாட்டின் பருவநிலை மிகவும் உகந்ததாகும்.

**துல்லிய பண்ணையத்தின் தொழில்நுட்பங்கள்**

துல்லிய பண்ணையத்தில் தொலையுணர்வு தொழில்நுட்பம், உளிக்கலைப்பை ஆழ் உழவு முறை, உயர் விளைச்சல் தரவல்ல வீரிய ஒட்டு இரகங்களின் உபயோகம், நிழல் வலை மற்றும் குழுத்தட்டு நாற்றங்கால், குறிப்பிட்ட பயிர் எண்ணிக்கை, சொட்டு நீர்ப்பாசன முறை, திரவ வழி உரமிடுதல், பரிந்துரைக்கப்பட்ட உயிர் உரங்கள், சீரான பயிர்ப் பாதுகாப்பு முறைகள், அறுவடை தரம் பிரித்தல் நவீன விளைப்பொருள்கள் சேமிப்புக்கலன் மற்றும் பிளாஸ்டிக் கூடைகளில் சந்தைக்கு எடுத்து செல்லுதல்

போன்ற நவீன தொழில்நுட்பங்கள் மூலம் துல்லிய பண்ணைய திட்டம் செயல்படுத்தப்படுகின்றன.

**தொலையுணர்வுத் தொழில்நுட்பம்**

தொலையுணர்வுக் கோள்கள் மூலம் மண் வளத்தை அறிந்து உரமிடும் தொழில் நுட்பம் சீரான உர நிர்வாகத்திற்கு அடிப்படை ஆகும். மண்ணிலுள்ள சத்துக்களை நுட்பமாகக் கணித்தறிய இத்தொழில் நுட்பம் பெரிதும் உறுதுணை புரிகிறது. ஒரு எக்டர் நிலத்தில் எந்தப்பகுதியில் வளம் அதிகம். எங்கே சமநிலை, எங்கே தாழ்நிலை என்பதனைக் கண்டறிந்து அதற்கேற்ப உர நிர்வாகம் செய்ய இத்தொழில்நுட்பம் மிகவும் உதவியது.

**வீரிய ஒட்டு இரகங்கள்**

தற்போதைய சூழ்நிலையில் நமது காய்கறிகளின் மகசூல் ஒரு எக்டருக்கு சாரசரியாக 16 டன்கள் மட்டும். எனவே, காய்கறி உற்பத்தித் திறனை அதிகரிக்க வீரிய ஒட்டு இரகங்களைப் பயிரிட்டு மற்றும் நவீன தொழில்நுட்பங்களை கையாண்டு துல்லிய பண்ணையம் மூலம் அதிக இலாபம் பெறலாம்.

- ✤ வீரிய ஒட்டு இரகங்களின் நன்மை
- ✤ அதிக மகசூல்
- ✤ நல்ல தரம்
- ✤ சீராக வளரும் தன்மை
- ✤ பூச்சி மற்றும் நோய் தாக்குதலுக்கு எதிர்ப்புத் திறன்
- ✤ அதிக வருமானம்
- ✤ குறுகிய காலத்தில் முதல் அறுவடை
- ✤ அன்னிய செலாவணி

**குழித்தட்டு நாற்றங்கால்**

நாற்றுகளை, குழித்தட்டுகளில் (Protrays) உற்பத்தி செய்ய வேண்டும். நாற்றுகளை வளர்ப்பதற்கு மண்ணை ஊடமாகப் பயன்படுத்தாமல் நன்கு பதப்படுத்தப்பட்ட தென்னை நார்க்கழிவை பயன்படுத்தி உற்பத்தி செய்வதன் மூலம் தரமான நாற்றுகளை உற்பத்தி செய்ய முடியும். நாற்றுகளை மண்ணில் நேரடியாக வளர்க்கும்போது, மண் இறுக்கமாக இருப்பதுடன் மண்ணிலுள்ள நோய் பரப்பும் பூஞ்சாணங்கள் எளிதில் நாற்றுகளைத் தாக்கி சேதம் விளைவிக்கின்றன. எனவே, நாற்றுகளை தனித்தனியாக குழித்தட்டுக் களில் (Protrays) வளர்ப்பதால் நோய் பரவாமல் நீர் தேங்காமல் போதிய இடைவெளியுடன் செழிப்பாக வளர் கின்றது. பொதுவாக காய்கறி பயிர்களுக்கு 0.8 மி.மீ தடிமன் கொண்ட 98 குழிகள் உள்ள தட்டுகள் பயன்படுத்தப்படுகிறது. இக்குழித் தட்டுகளில் அதிகப்படியான நீர் வடிந்து செல்ல ஏதுவாக கீழே துவாரங்கள் காணப்படும்.

**நிழல் வலை நாற்றங்கால்**

நாற்றுகளை நிழல்வலை குடில் அமைத்து வளர்க்கும்போது செடி வளரத் தேவையான சூழலை ஏற்படுத்துகிறது. இந்நிழல்வலை உட்புறம் ஒளியினைக் கட்டுப்படுத்துவதால் நாற்றுக்கள் வளர ஏதுவான சூழ்நிலை கிடைக்கிறது.

சமவெளிப் பகுதிகளில் காய்கறிப் பயிர் நாற்றுக்களை வளர்க்க 50 விழுக்காடு நிழல் தரும் பச்சை நிற நிழல்வலை ஏற்றது. மலைப்பிரதேசங்களில் 30 விழுக்காடு நிழல் தரும் கருப்பு நிற நிழல் வலை உகந்தது. தென்னை நார்க்கழிவு மற்றும் உயிர் உரங்களும் உள்ள ஊடகத்தில் விதைகள் விதைப்பதன் மூலம் சீரான வளர்ச்சியடைய நாற்றுக்களை பெற முடியும். மேலும், நிழல்வலை நாற்றங்கால் மூலம் நாற்று தயார் செய்யும்போது அனைத்து நாற்றுக்களும் சீரான வளர்ச்சி மற்றும் பருமனுடன் வளரும்.

**உளிக்கலப்பை**

ஆண்டுக்கணக்கில் டிராக்டர் உபயோகிப்பதாலும், பரவல்நீர் பாசன முறையை மேற்கொள்ளுவதாலும், மண்ணின் மேற்பரப்பிலிருந்து மண் துகள்கள் நுண்ணிய அளவில் கீழே சென்று படிந்து (45 செ.மீ.) மண்ணினுடைய வடிகால் தன்மையையும், உள்காற்றோட்டத்தையும் கெடுத்து விடுகிறது. உளிக்கலப்பை கொண்டு உழுவதால் படிமம் கிழிக்கப்பட்டு, நல்ல வடிகால் வசதியும் மற்றும் உள்காற்றோட்டத்தையும் சீர்படுத்துகிறது.

**சொட்டு நீர்ப்பாசனம்**

சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பின் மூலம், நீரில் கரையும் உரத்தினை இடுவது துல்லியமான நீர்ப்பாசனம் மற்றும் உர மேலாண்மையை மேற்கொள்ள இயலும். 1.5 மீட்டர் x 60 செமீ. இடைவெளியில் சொட்டு நீர்ப்பாசன வசதி அளிக்கப்படுகிறது. செடியின் வேருக்கு அருகிலேயே தண்ணீர் சொட்டு சொட்டாக அளிக்கப்படுவதால் நீர் சிக்கனம் மட்டுமின்றி, குறைந்து களைகள், சீரான காற்றோட்டத்தினால், மலர்களும், காய்களும் உதிராமை, மண்ணின் மேற்பரப்பு பெரும்பாலும் அளவான ஈரத்துடன் இருப்பதால் குறைந்த அளவு பூச்சி, பூஞ்சாணங்கள், 60 விழுக்காடு ஈரப்பதமும் 40 விழுக்காடு உட்காற்றோட்டமும் மண் பெறுவதால் அபரிமித வேர்வளர்ச்சி ஆகியன சொட்டுநீர்ப் பாசன முறையின் சிறப்பு அம்சங்களாகும்.

**சொட்டுநீர் மற்றும் உரப்பாசனத்தின் பயன்கள்**

செடிகளுக்கு அளிக்கப்பட வேண்டிய நீரையும், உரத்தையும் துல்லியமாகக் கணக்கிட்டு அளிக்க முடியும். மேலும் செடிகளின் வேர்பாகத்தில் நேரடியாகச் சென்று அடைவதால், சத்துக்கள் வீணாகாமல் பயிர்களால் எளிதாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பயிர்களின் வெவ்வேறு வளர்ச்சி காலங்களில் அதற்குத் தேவைப்படும் சத்துக்களை தேவையான அளவு அதிகப்படுத்தி கொடுக்க முடியும். அதாவது வேர்விடும் பருவத்தில் அதிக மணிச்சத்து, வளர்ச்சி காலத்தில் அதிக தழைச்சத்து, பூக்கும் காய்க்கும் பருவத்தில் அதிக சாம்பல் சத்து என்று தேர்வு செய்து பயிர்களுக்கு அளிக்க முடியும்.

இம்முறையில் மட்டுமே நுண்ணூட்டச் சத்துகளை திறம்பட அளிக்க முடியும். பயிர்களுக்கு அதிக

விளைச்சலும் கிடைக்கிறது. இம்முறையில் நீர் சேமிப்போடு, ஆட்செலவு மற்றும் நேரம் ஆகியவற்றை அதிக அளவில் குறைக்கலாம்.

இந்த உரங்களில் பயிர்களுக்கும் மண்ணுக்கும் தீங்கு விளைவிக்கக் கூடிய குளோரைடு, சோடியம் போன்ற உப்புகள் கிடையாது.

சொட்டுநீர் மற்றும் திரவ உரப்பாசனத்தில் காய்கள் பெரிதாகவும், நல்ல நிறத்துடனும், பளபளப்புத் தன்மையுடன் நல்ல சுவையுடனும் இருக்கும்.

**நீர்வழி உரமிடல்**

சாதாரணமாகப் பயன்படுத்தும் திட உரத்தைப் பயிர்களுக்கு இடும்போது உரம் முழுமையாக செடிகளுக்குப் போய் சேர்வதில்லை. சுமார் 20 முதல் 40 விழுக்காடு வரை உரம் வீணாவதோடு ஒருமுறை உரம் இடுவதற்கு ஏக்கருக்கு ரூபாய் 150 வரை செலவாகிறது.

ஆனால், உரத்தொட்டி மூலம் நீர்வழி உரங்களை பயிரின் வளர்ச்சிக்கு ஏற்ப ஐந்து நாள்களுக்கு ஒருமுறை கொடுக்கும்போது அனைத்து செடிகளுக்கும் உரம் சரியான விகிதத்ததில் போய் சேருகிறது. இதனால் செடிகளின் வளர்ச்சி ஒரே சீராக இருக்கும்.

**களை நிர்வாகம்**

துல்லிய பண்ணையத் திட்ட முறையில் நீர் மற்றும் உரங்களைப் பயிர்களின் வேருக்கு அருகிலேயே அளிப்பதாலும் தேவையில்லாத இடங்களில் அளிக்கப்படாததாலும் களைகளின் அளவு மிகவும் குறைந்து விடும். இதனால் களையெடுக்க ஆள் கூலிச் செலவும் குறையும். ஆனால் சாதாரண முறையில் களைகளின் அளவு அதிகமாக இருப்பதால், ஒவ்வொரு முறையும் களை எடுக்கும்போது 1015 விழுக்காடு எண்ணிக்கையில் காய்கறிச் செடிகள் அடிபட்டுவிடும். ஆனால், துல்லிய பண்ணைய முறையில் பயிர்க்காலம் முடியும் வரை பயிர் எண்ணிக்கை குறையாது.

**ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு**

வரும்முன் காப்பது என்ற அடிப்படையில் பூச்சி மற்றும் பூஞ்சாண நோய்த் தாக்கவல்ல பருவநிலையைக் கணித்து முன்னெச்சரிக்கைத் தடுப்பு முறையைக் கையாள்வதும், பூச்சிக்கும் பூஞ்சாணத்திற்கும் தகுந்த மருந்துகளை மட்டும் தெளிப்பது போன்ற பயிர்ப் பாதுகாப்பு முறைகள் மூலம் செலவினத்தில் மூன்றில் ஒருபங்கை குறைக்க முடியும்.

**விளைப் பொருள்கள்**

கிட்டத்தட்ட 60 சத விளைச்சல் அதிகரிப்பு முதல் தரமான விளைப் பொருள்களை பிளாஸ்டிக் கிரேட்டில் தரம் பிரித்து சந்தைக்கு அனுப்புதல் ஆகியன சிறப்பு அம்சங்களாகும். தக்காளி, மிளகாய், கத்தரி, வெண்டை, பஜ்ஜி மிளகாய், பூக்கோசு, முட்டைக்கோசு, வாழை, பீன்ஸ், புடல், பீர்க்கு, சுரை, கேரட், வெங்காயம், உருளைக் கிழங்கு போன்றவற்றில் விளைப்பொருள்களின் தரத்தினை அறிந்தால் வியாபாரிகள் விவசாயிகளோடு ஒப்பந்தம் பேச தானே முன் வருவர்.

**உழவர்களும், வர்த்தகர்களும் அடையும் நன்மைகள்**

உற்பத்தி செய்யும் காய்கறிகளை தோட்டத்தில் தரம் பிரித்து விற்பனைக்கு அனுப்புவதால் வியாபாரிக்கு சேதம் ஏற்படாமல் இலாபகரமான வியாபாரத்திற்கு வழிவகுக்கிறது.

துல்லிய பண்ணைய முறையில் விளையும் காய்கறி நல்ல நிறத்துடனும், சுவை மிகுந்ததாகவும் மற்றும் அதிக நாள்கள் கெடாமலும் இருக்கிறது. இதனால், உழவர்கள், வியாபாரிகள் மற்றும் பொதுமக்களும் நன்மை அடைகின்றனர்.

எதிர்கால சந்ததிகளுக்கு நாம் மீதம் வைக்கும் மிகப் பெரிய சொத்து தண்ணீர். எனவே, உழவர்கள் துல்லிய பண்ணைய திட்டத்தின் மூலம் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்து குறைந்த நீரில் நிறைந்த விளைச்சல் பெற்றிடலாம். அதனால் பொருளாதார நிலையும் உயரும்.

நமது ஆரோக்கியமான நல் வாழ்வுக்குத் தேவையான சுண்ணாம்புச் சத்து மற்றும் தாது உப்புகள் போன்ற சத்துக்கள் காய்கறிப் பயிர்களில் அதிக அளவில் நிரம்பி உள்ளன. மேலும் காய்கறி பயிர்களின் உற்பத்தியில் தன்னிறைவு என்ற நிலையை நாம் வெகு விரைவில் அடைய வேண்டுமெனில் துல்லிய பண்ணைய திட்ட தொழில் நுட்பங்களை சீரிய முறையில் காய்கறிப் பயிர்கள் சாகுபடிக்கு பயன்படுத்த வேண்டும். ஆகவே, துல்லிய பண்ணைய தொழில் நுட்ப முறைகளைக் கடைப்பிடித்து காய்கறிப் பயிர்கள் சாகுபடி செய்வதின் மூலம் நாமும் நலம் பெறலாம். நாடும் வளம் பெறும். ✤

## "மீன் எண்ணெய் சாப்பிட்டால், மூளை இளமையாக இருக்கும்"

**மீன் எண்ணெயில், ஒமகோ 3 கொழுப்பு அமிலம் என்ற ஊட்டச் சத்து அதிக அளவில் உள்ளது. இந்த ஒமேகா 3, மூளையை இளமையாக வைத்திருக்க உதவுவதாக அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ள னர்.**

**67 வயதுள்ள சுமார் 1,500 பேரிடம் ஆய்வு நடத்தி, அவர்கள் இதைக் கண்டுபிடித்துள்ளனர். ஒமேகா அமிலத்தைக் குறைவாக சாப்பிட்டவர்களின் மூளை சுருங்கியும், ஞாபக மறதி, மனநிலை பிறழ்வு போன்ற பாதிப்புக்கும் ஆளாகி இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். எனவே, ஒமேகா அமிலம் நிறைந்த மீன்களையும், மீன் எண்ணெயையும் சாப்பிட வேண்டும் என்று அவர்கள் பரிந்துரைத்துள்ளனர்.**



மின்அஞ்சல்: ncmsooty@gmail.com
போன்: 2442339, 2443975, 2443028

**நீலகிரி கூட்டுறவு**
**விற்பனைச் சங்கம் லிமிடெட்**
**நெ.கே.708,**
செயிலிங் ஹவுஸ், உதகமண்டலம்

எங்களது நிறுவனம், நீலகிரி மாவட்ட விவசாயிகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு நல்ல நண்பனாக, நல்லதொரு வழிகாட்டியாக செயலாற்றி வருகிறது.

- 86 வருடங்களாக நீலகிரி விவசாயிகளின் நம்பிக்கை பெற்ற நிறுவனம்.
- நீலகிரி விவசாயிகளுக்கு தரமான கலப்பு உரங்கள் உரக்கலவை இயந்திரங்கள் மூலம் தயாரித்து வழங்கப்பட்டு வருகிறது.
- தரமான விதைகள் மற்றும் விவசாய இடுபொருட்கள் மற்றும் வேளாண் கருவிகள் - விநியோகம்
- கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் உலகப்புகழ் பெற்ற உருளைக்கிழங்கு ஏல விற்பனை மையம்
- மேட்டுப்பாளையம் கிளையில் உறுப்பினர்கள் நலன் கருதி தங்கும் விடுதி
- உறுப்பினர்களுக்கு குறைந்த வட்டியில் உடனடியாக நகைக்கடன்
- உதகை மற்றும் கூடலூரில் சமையல் எரிவாயு விநியோகம்
- உதகையில் விவசாயிகளின் மலைக்காய்கறிகள் ஏல விற்பனை மையம்
- உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகளின் நலன் கருதி உதகையின் மையப்பகுதியில் 60 டன் எடைகொண்ட கணினி எடைமேடை
- உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி உதகை மற்றும் கோத்தகிரியில் இரண்டு கல்யாண மண்டபங்கள் செயல்பட்டு வருகிறது.



**துணைப்பதிவாளர் / செயலாட்சியர்**

# கரிப் பருவத்தில் புதுக்கோட்டை மாவட்டதிற்கேற்ற மிளகு சாகுபடி தொழில்நுட்பங்கள்

✤ திருமதி. வி.பு.சாந்தி,
திருமதி. வீ.விஜயலட்சுமி,
திரு. ஆ.யுவராஜா



**மி**ளகு நறுமணப் பொருட்களின் ''ராஜா'' (வாசனை அரசன்) மற்றும் ''கருப்பு தங்கம்'' என்று அழைக்கப்படுகிறது. ''மிளகு சிறுத்தாலும் காரம் குறையாது '' என்ற பழமொழிக்கு ஏற்புடைய மிளகுக் கொடியானது மலைப் பகுதி மற்றும் சமவெளிப் பகுதிகளில் காண்பதற்கு அரிய காட்சியாக பசுமை போர்த்திய கொடியாக காணப்படுகிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் சமவெளிப் பகுதிகளில் தென்னை அல்லது பாக்கு போன்ற தோட்டப் பயிர்களில் படர் மரங்களாக மிளகு சாகுபடி செய்யபடுகிறது. கொடி ஏறுவதற்கு சில்வர் ஓக் என்ற மரம் பயன்படுகிறது. இக்காட்சியானது பார்ப்பதற்கு வெள்ளி உருகி சிறு முத்துக்களாக உதிருவது போல் தோன்றும்.

மிளகு பயிரானது இந்திய. பிரேசில், இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் அதிகம் சாகுபடி செய்யப்படுகிறது. இந்தியாவில் 24 இலட்சம் எக்டர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. இதன் மூலம் ஒரு வருடத்திற்கு மகசூல்

✤ வேளாண்மை அறிவியல் மையம் வம்பன், புதுக்கோட்டை

65.000 டன் ஆகும். இதனுள் 60 சதவீதம் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இந்தியாவில் மிளகுப் பயிர் கேரளா, கர்நாடகம். தமிழ் நாடு, ஆந்திரப் பிரதேசம். மகராஷ்டிரா மற்றும் ஒரிசா போன்ற மாநிலங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. இதன் மூலம் வாசனைப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள். உணவுப் பொருட்கள் மற்றும் மருந்து பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. மிளகின் காரத்தன்மைக்கு காரணமான ‘‘பைப்ரின் மற்றும் ஒலியோரிசின்’’ என்ற வேதிப் பொருட்களின் அளவைப் பொறுத்தே அதன் தரம் நிர்ணயிக்கப் படுகிறது.

தமிழ் நாட்டில் கிழக்கு மலைத் தொடர்ச்சியில் உள்ளகொல்லி மலை, ஏற்காடு, தடியன் குடிசை. தாண்டிக் குடி மற்றும் பழனிமலைப் பகுதிகளில் மற்றும் புதுக்கோட்டை மாவட்டதில் சமவெளிப் பகுதிகளில் தென்னை அல்லது பாக்கு போன்ற தோட்டங்களில் படர் மரங்களாக மிளகு சாகுபடி செய்யப்படுகிறது. பொதுவாக மிளகு தனிப் பயிராக சாகுபடி செய்யப்படுதில்லை கூடுதலான மற்ற பயிர்களான காப்பிப் பயிர். கமலா ஆரஞ்சு, மா. பலா,அன்னாசிப்பழம், ஏலம் போன்ற எண்ணற்ற பயிர்களுடன் சேர்ந்து சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது.

**இரகங்கள்**

இந்தியாவில் நூற்றுக்கு மேற்பட்ட இரகங்கள் இருக்கின்றன. ஆரம்ப காலத்தில் மிளகுப் பயிரானது திருவாங்கூர் மற்றும் மலபார் இரகங்களாக பிரிக்கப்பட்டது. அதாவது கரிமுண்டா, சிறிய கணிய காடன், கொடா நாடான், பெரும் கொடி சுமலா மற்றும் நாராயக் கொடி ஆகியன திருவாங்கூர் வகையைச் சாரும். கல்லுவாளி, உதிரங்கொட்டான், கோட்டவாளி, குதிரவாளி, பாலன் கொட்டான் மற்றும் செரியக் கொடி வகைகள் மலபார் வகைகளைச் சாரும். இவ்விரு வகையிலும் கரிமுண்டா இரகம் துரிதமாக முன் கூட்டியே அறுவடைக்கு வந்து விடும். மணிகள் கரும் பச்சை நிறத் தில் காணப்படும்.எண்ணற்ற இரகங்கள் இருப்பினும் இவற்றுள் பெரு வாரியாக காரத்தன்மை மிகையான ரகமேயாகும்.



மதுரை மாவட்டத்தில் மதுரை கிழக்கு வட்டாரத்தின் கீழ் செயல்படும் களிமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உறுப்பினர் கல்வித் திட்டம் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.50 இலட்சம் மதிப்புள்ள மகளிர் சுய உதவிக் குழுக் கடன் வழங்கும் விழா நடைபெற்றது. இவ்விழாவை மதுரை மண்டல இணைப்பதிவாளர் திரு.சி.குருமூர்த்தி தலைமையேற்று துவங்கி வைத்தார். மேலும் மதுரை சின்ன உடைப்பு கூட்டுறவு பயிற்சி கழகத்தின் இயக்குநர் முனைவர்.ச.தர்மராஜ் சிறப்புரையாற்றினார். இவ்விழாவில், மதுரை சரகத் துணைப்பதிவாளர் திரு.பா.பாபு, மதுரை மாவட்ட கூட்டுறவு ஒன்றிய மேலாண்மை இயக்குநர் திரு.ம.தீனதயாளன், மதுரை கிழக்கு வட்டார கள அலுவலர் திருமதி.வீ.கண்ணம்மாள், களிமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் செயலாட்சியர் திரு.காமேஷ் கண்ணா, கூட்டுறவு பயிற்சிக் கழக விரிவுரையாளர் திரு.ஞா.கதிரவன், கூட்டுறவு வளர்ச்சி அலுவலர், சங்கச் செயலாளர், சங்கப் பணியாளர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

**கூட்டுறவே நாட்டுயர்வு!**

**கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகச் சேருங்கள்! பயன் பெற்று வளம் பெறுங்கள்!!**

**மண் மற்றும் காலநிலை**

மிளகு மிதவெப்ப மண்டல பகுதியில் (Wam Humid tropics) நன்றாக வளரக் கூடியது. இது கடல் மட்டத்திலிருந்து 1500 மீ உயரம் உள்ள மலைப் பகுதிகளில் மிளகு பயிரிடுவதற்கு ஏற்றது ஓர் ஆண்டிற்குத் தேவையான சராசரி மழையின் அளவு 200 –300 செ.மீ ஆகவும் வெப்பநிலை 10° செ.கி இருந்து 40° செ.கி வரை இருக்க வேண்டும். காற்றின் ஈரப்பதம் 60–95 சதவீதமாகவும். மண்ணின் கார அமிலத் தன்மை 4.5 லிருந்து 6.0 ஆகவும் இருத்தல் வேண்டும். மணல் கலந்த குரு மண் வகை மிளகு சாகுபடிக்கு ஏற்றது.

**நடவு முறை**

மிளகு பயிரானது மேற்கு கடற்கரைப் பகுதிகளில் பின்வரும் முறைகளில் பயிரிடப்படுகிறது.

கடற்கரைப் பகுதிகளில் வீட்டு தோட்டங்களிலும்

நடுத்தர பகுதிகளில் தனிப்பயிராக வும் மற்றும்

மலைப் பகுதிகளில் 300–1500மீ உயரம் உள்ள காப்பி, ஏலக்காய், தேயிலை முதலியத் தோட்டங்களில் சார்பு மரங்களின் மீது ஏற்றி வளர்க்கப்படுகிறது.

மலைச் சரிவுகளில் மிளகு பயிரிடப்படும் போது தென் சரிவு பகுதிகளை நடுவதற்கு தேர்வு செய்வதை தவிர்க்க வேண்டும். வட கீழ் பாதி மற்றும் வட கிழக்கு பகுதிகளை தேர்வு செய்ய வேண்டும். இதன் மூலம் கோடை காலத்தில் சூரியனின் வெப்பத்திலிருந்து மிளகுக் கொடிகளை காப்பாற்றலாம்.

**பயிர்ப் பெருக்கம்**

வீரிய வளர்ச்சியும். அதிக காய்ப்புத் திறனும். நீளமான சரத்தைக் கொடுக்கும் தாய்க் கொடிகளை தேர்வு செய்ய வேண்டும். அவற்றில் ஓடும் கொடிகள், செடியின் அடிப்பாகத்தில் வளர்ந்து தரையில் மேல் படர்ந்து காணப்படும். இம்மாதிரியான கொடிகளில், நடுபாகத்தில் இருந்து நடவிற்கு கொடிக் குச்சிகளை எடுக்க வேண்டும். கொடிக்குச்சிகள் உற்பத்திக்குச் சிறந்த காலம் பிப்ரவரி மார்ச் மாதங்களாகும். பாலித்தீன் பைகளில் நடப்பட்ட கொடிக்குச்சிகளை பனிக்கூடாரத் தினுள் அல்லது மிதமான நிழலில் வைத்து பராமரிப்பதன் மூலம் அவைகள் ஒரு மாதத்தில் புதிய துளிர்விட்டு வளர ஆரம்பிக்கும். நன்கு வேர்விட்ட கொடிக் குச்சிகளை நடவிற்கு பயன்படுத்த வேண்டும்.

**நடவு**

சமமான நிலங்களிலும், மலைச் சரிவுகளிலும் மண் வளப் பாதுகாப்பு முறைகளை கையாண்டு மிளகு நடவு செய்யலாம். ஒரு ஏக்கரில் தனிப்பயிராக சாகுபடி செய்ய 1000 வேர்விட்ட குச்சிகள் தேவைப்படும்.

**படர் மரங்கள்**

மிளகு நடுவதற்று உரிய படர்மரங்கள் தேர்வு செய்வது மிகவும் அவசியமாகும். மிளகு கொடிகள் நன்கு படர்ந்து வளர்வதற்கு சில்வர் ஓக், கல்யாண முருங்கை, முள் முருங்கை போன்றவை ஏற்ற படர் மரங்களாகும். படர் மரத்தின் அடிப்பாகத்திலிருந்து 30 செ.மீ தள்ளி 30 செமீ.நீள அகல ஆழமுள்ள குழிகள் தோண்டி குழிக்கு 10 கிலோ கம்போஸ்ட் உரத்துடன், மேல் மண் கலந்து சூடோமோனாஸ் மற்றும் டிரைகோடெர்மா ஆகிய இயற்கை பூஞ்சாணக் கொல்லிகளை 10 கிராம் வீதம் கலந்து இடுதல் அவசியம்.

தென்னை அல்லது பாக்கு போன்ற தோட்டப்பயிர்களை படர் மரங்களாக பயன்படுத்தும் போது, படர் மரங்களின் அடியிலிந்து 50 செ.மீ தள்ளி குழி எடுத்து மிளகுக் கன்றுகளை நட வேண்டும்.

**உரமிடல்**

உரங்களை சம அளவாகப் பிரித்து ஏப்ரல் – மே மாதத்திலும், ஆகஸ்ட் – செப்டம்பர் மாதத்திலும் இட வேண்டும். மிளகுக் கொடி ஒன்றுக்கு தொழு உரம் 10 கிலோ, யூரியா 330 கிராம், சூப்பர் பாஸ்பேட் 300 கிராம் மூரியடே ஆப் பொட்டாஸ் 240 கிராம் இத்துடன் மக்னீசியம் சல்பேட் 2 கிராம் கலந்து இடுதல் வேண்டும்.

**வளர்ச்சி ஊக்கி**

மிளகில் மகரந்தச் சேர்க்கை தண்ணீர் மூலமே நடைபெறுகிறது. எனவே. மிளகு பூத்த 40வது நாளில், ஒரு முறை தண்ணீர் தெளிக்க வேண்டும் பின்பு 10 நாட்கள் கழித்து 4. லிட்டர் தண்ணீருக்கு 4 மில்லி பிளேனோபிக்ஸ் மருந்து என்ற அளவில் கலந்து தெளித்தால், மிளகில் காய்கள் அதிகம் பிடித்து நன்கு வளர்ச்சியடையும்.

**பயிர் பாதுகாப்பு**

மிளகுப் பயிரை தாக்கும் பூச்சிகள்

**பொல்லு வண்டு**

இதைக்கட்டுப்படுத்த ஒரு லிட்டருக்கு 2 மி.லி. மோனோ குரோட்டோபாஸ் மருந்து என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

**பேன்கள்**

இப்பூச்சித் தாக்குதலைக் தடுக்க ஒரு லிட்டர் நீரில் மானோகுரோட்டாபாஸ் 1.5 மி.லி அல்லது டைமிதாயேட் 2 மி.லி. அல்லது குளோரோபைரிபாஸ் 1.5 மி.லி. ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை தெளிக்கலாம்.

**நூற் புழுக்கள்**

கொடி ஒன்றுக்கு 25 கிராம் திம்மெட் அல்லது 40 கிராம் கார்போபியூரான் குருணை மருந்தை 1 கிலோ வேப்பம் புண்ணாக்குடன் கலந்து இட வேண்டும்.

**மெதுவாடல் நோய்**

இலைகள் பழுத்து மஞ்சள் நிறத்திலும், இலைகள் உதிர்வதும். சில இலைகள் காய்ந்து இருப்பதும். நோய்க்கான அடையாளங்களாகும்.

**நோய் தடுப்பு முறைகள்**

நடவு குச்சிகளை 0.2 சத காப்பர் ஆக்சிகுளோரைடு கலவையில் நனைத்து நட வேண்டும்.

நடும் முன்பாக பைகளிலுள்ள மண் நன்கு நனையும்படி 1 சத போர்டோ அல்லது 0.25 சத காப்பர் ஆக்ஸி குளோரைடு கலவையை ஊற்றவும்.

நாற்றாங்காலில் நோய் வராமல் தடுக்க 1 சத போர்டோ கலவை அல்லது 0.2 சத காப்பர் ஆக்ஸி குளோரைடு கலவையை தெளிக்கவும்.

**அறுவடை**

இளம் மிளகுப் பயிர்களில் நட்ட இரண்டாமாண்டு ஓரிரு பூக்கள் காணப்படும் மலைப்பிரதேசங்களில் மூன்றாம் ஆண்டே மிளகு மணிகளை அறுவடை செய்யலாம். மிளகுக் கொடிகள் மே+சூன் மாதங்களில் பூக்கின்றது. பூக்கும் காலத்திலிருந்து காய்கள் அறுவடை செய்வதற்கு சுமார் 6 முதல் 8 மாதங்கள் வரை எடுத்துக் கொள்கின்றது. சம தரைப்பகுதிகளில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஆகும். சமவெளி பகுதிகளில் அறுவடையானது. நவம்பரில் ஆரம்பித்து ஜனவரி வரை தொடரும். ஆனால் மலைப் பகுதிகளில் மார்ச் மாதம் ஆரம்பமாகிறது. மிளகு சரத்தின் ஒன்று இரண்டு பழங்கள் சிகப்பு நிறமாக மாறும் போது. சரத்தினை கையால் பறிக்க வேண்டும். மூங்கில் அல்லது அலுமினிய ஏணியின் உதவியுடன் அறுவடை செய்ய வேண்டும்.

அறுவடை செய்யப்பட்ட பழங்களை 7 முதல் 10 நாட்கள் வரை வெயிலில் காய வைக்க வேண்டும். மிளகு அறுவடை முடிந்த பின் மே – சூன் மாதங்களில் நிழல்

பராமரிப்புக்காக சார்பு மரங்களின் எஞ்சிய கிளையை அவ்வப்போது களைந்து விட வேண்டும்.

**மிளகு அறுவடையில் இயந்திரத்தின் பங்கு**

**அறுவடை ஏணி**

இவ் ஏணிகள் ஒரே ஏணியாக 20 அடி உயரம் வரை காணப்படும் அல்லது இவ் ஏணியில் மேலும் 10 அடி உயரம் செல்லும் வகையில் மற்றொரு நுனி ஏணி பொருத்தப்பட்டிருக்கும். ஆக மொத்தம் 30 அடி வரை சென்று பறிக்கக்கூடிய ஏணிகளை விவசாயிகள் பயன்படுத்து கிறார்கள். இவ்வாறு அறுவடை செய்த மிளகுக் கொத்துக்களை சேகரித்து உலர் களத்தில் பரப்பி, மனிதனுடைய கால்கள் உதவிகொண்டு நன்கு மிதித்து பிரித்து எடுக்கப்படுகிறது.

**மிளகு பிரித்தெடுப்பான் கருவி**

கொச்சியில் உள்ள வாசனைப்பயிர் கழகம், இயந்திர வடிவில் மிளகு பிரித்தெடுப்பான் கருவியை அறிமுகம் செய்துள்ளது. இந்த இயந்திரத்தின் மூலம் வேலையாட்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது.

பழங்களை கையினாலோ அல்லது பிரித்தெடுக்கும் இயந்திரம் கொண்டோ பிரிக்க வேண்டும் இயந்திரத்தின் மூலம் மணிக்கு 0.5 முதல் 1.0 டன் மணிகள் வரை சரங்களிலிருந்து பிரித்து எடுக்கலாம். இதற்கு இரண்டு ஆட்கள் மட்டுமே தேவைப்படுகிறது.

இயந்திரத்தினால் பிரிப்பதால் வேகமாகவும் தூய தரமான மிளகு கிடைக்கும். காய்ந்த மிளகு தொல் பகுதியில் அதற்குரிய சுருக்கங்களுடன் காணப்பட வேண்டும். அறுவடை செய்யப்பட்ட மிளகினை ஒரு நிமிடம் சுடு நீரில் நனைத்து. பிறகு வெயிலில் காய வைக்கும் போது. கறுப்பு நிறத்தில் மிளகு கிடைக்கும். அது மட்டுமில்லாமல் காய வைக்கும் நேரமும் குறைகிறது. மிளகினை சிமெண்ட் தரையிலோ. பாலித்தீன் விரிப்புகளிலோ அல்லது மூங்கிலினால் செய்யப்பட்ட பாய்களிலோ காய வைக்க வேண்டும். இதனால். சுத்தமான, தரமான சிறந்த நிறமுடைய மிளகு கிடைக்கும். காய வைப்பதற்கு தேங்காய் கொப்பரை உலர வைக்கும் உலர்த்தி மூலம் உலர வைக்கலாம். உலர்த்திகளில் உலர வைக்கும் போது, தட்பவெப்ப நிலை 609 செ.சி இருக்க வேண்டும். தரத்தினை மேம்படுத்த மூங்கில் பாய், கான்கிரீட் உலர் தளம். பாலித்தீன் தார்ப்பாய் போன்ற சுத்தமான சுகாதாரமான பரப்புகளின் மீது மிளகினை உலர்த்த வேண்டும்.

**வெள்ளை மிளகு**

வெள்ளை மிளகு அறுவடை செய்யப்பட்ட பழங்களிலிருந்தோ அல்லது கருப்பு மிளகிலிருந்தோ தயாரிக்கப் படுகிறது. அறுவடை செய்யப்பட்ட பழுத்த பழங்களை தண்ணீரில் சுமார் 8 முதல் 10 மணி நேரம் ஊற வைக்க வேண்டும் பிறகு அதன் மேல் தோலை நீக்க வேண்டும் தோல் நீக்கப்பட்ட மிளகினை. தண்ணீரில் கழுவி காய வைக்க வேண்டும். சுமார் 100 கிலோ பழங்களிலிருந்து. 25 கிலோ வெள்ளை மிளகு கிடைக்கும். பன்னியூர் 1 என்ற இரகம் வெள்ளை மிளகு செய்வதற்கு ஏற்ற சிறந்த இரகமாகும். கருப்பு மிளகை நீராவியில் வேக வைத்தல் மற்றும் மேல் தோலை பிரித்தெடுத்தல் முதலிய முறைகளை பின்பற்றி வெள்ளை மிளகு தயார் செய்யப்படுகிறது. நன்கு பாதுகாக்கப்பட்ட தோட்டங்களிலிருந்து வருடத்திற்கு ஒரு கொடிக்கு 2 கிலோ காய்ந்த மிளகு கிடைக்கும்.

**தரம் பிரித்தல்**

மிளகு பொதுவாக விற்பளை செய்யும் போது. தரம் பிரிக்கப்படாமலே வரும் ஏற்றுமதிக்கு அனுமதிக்கப்படும் முன்பு மிளகினை தரம் பிரித்தல் அவசியமாகிறது. மிளகின் காரத்தன்மையை பொறுத்தும் மிளகு மணிகளின் அளவை வைத்தும் தரம் பிரிக்கின்றனர். அதாவது

- ✤ மலபார் கார்பிள்டு கிரேட் 1 மற்றும் கிரேட் 2 – கருப்பு (MG Grade 1 & MG Grade 2)
- ✤ மலபார் அன்கார்பிள்டு 1 மற்றும் கிரேட் 2 – கருப்பு (MUG Grade & MUG Gade2)
- ✤ தெலிச்சேரி கார்பிள்டு ஸ்பெசல் எக்ஸ்டிரா போல்டு கருப்பு மிளகு (TGSEB) (TGEB)
- ✤ தெலிச்சேரி கார்பிள்டு எக்ஸ்டிரா போல்டு (TGEB)
- ✤ தெலிச்சேரி கார்பிள்டு (TG)
- ✤ கார்பிள்டு மிதமான கருப்பு மிளகு (GL Special, GL Grade 1 & GL grade 2)
- ✤ அன்கார்பிள்டு மிதமான கருப்பு மிளகு (UGL Special, UGL Grade 1 & UGL grade 2)
- ✤ பின்ஹெட் (PH special grade & PH grade 1)
- ✤ கருப்பு மிளகு NS grade X (கிரேட் குறிப்பிடாதது)

**மிளகினை சேகரித்து பாதுகாத்தல்**

- ✤ நன்கு காய்ந்த மிளகில் ஈரப்பதம் 10+11* மிகாமல் இருத்தல் வேண்டும்.
- ✤ அவற்றை பாதுகாக்கும் அறையில் காற்றோட்டம் இருப்பது மிகவும் தேவை

✤ அறையில் காற்றின் ஈரப்பதம் அதிகரித்தால் பூசணத்தாக்குதலுக்கு ஏதுவாக அமைந்து விடும்.

✤ மரப்பெட்டிகளின் கீழ் பாகத்திலும் மேல் பாகத்திலும் சாக்கு பைகளை உபயோகப்படுத்தி மூடி வைத்து சேமிக்கலாம்.

✤ பெட்டிகளின் உள்ளே வெளிச்சம் புகாமல் இருப்பின், மிளகின் காரத்தன்மை குறையாமல் இருக்கும்

✤ மற்ற வாசனை பயிர்களுடனோ மூலிகை பயிர்களுடனோ இவற்றை சேமித்து வைப்பதை தவிர்க்க வேண்டும்.

**மிளகில் கலப்படத்தை கண்டறிதல்**

சாதரணமாக நாம் கடைகளில் வாங்கி பயன்படுத்தும் காய்ந்த மிளகு மணிகளுடன் மிகச்சிறிய அளவில் தூசி, மண் கட்டிகள் மற்றும் உலர்ந்த தண்டின் துண்டுகள் போன்றவை கலந்திருக்கும். இவற்றினை எளிதில் கண்டறியலாம். ஆனால் பார்வையில் காய்ந்த மிளகு மணிகளைப் போலவே இருக்கும். காய்ந்த பப்பாளி பழத்தின் விதைகளை கலப்படம் செய்து விற்பனை செய்வபர்களும் உள்ளனர். சிறிய பூதக் கண்ணாடி மூலம் பார்த்தால் கலப்படம் செய்யப்பட்டுள்ளதா இல்லையா என்பதை கண்டறியலாம். குறுமிளகு மணியின் தோல் பல்வேறு கோணங்களில் சுருங்கி காணப்படும். ஆனால் பப்பாளி விதையில் ஓர் குறிப்பிட்ட வடிவமைப்பில் மட்டுமே சுருங்கியது போல் காட்சியளிக்கும். பப்பாளி விதைகளின் உள்ளே நீள் கோடு போன்ற அடையாளம் இருக்கும். ஆனால் மிளகு மணிகளின் மத்தியில் மட்டும் ஓர் துளை காணப்படும்.

**வர்த்தகம்**

பன்னாட்டு மிளகு குழுமம் (International Pepper Community) மிளகுப் பயிரில் சாகுபடி முதல் வர்த்தகம் வரையிலான செய்திகளை கைப்பேசியில் உள்ள செய்தித் துணுக்கு வசதி வாயிலாக உலகெங்கும் கொடுத்து வருகிறது. இச் சேவையை இந்தோனேசியா நாட்டினுள் உள்ள தொலை தொடர்பு துறை மூலமாக இலவசமாக வேளாண் பெரு மக்களுக்கு வழங்கப்படுகிறது. இச் செய்தியை மிளகு சாகுபடியாளர்களுக்கு இந்தியாவிலுள்ள வாசனை பயிர்கள் கழகத்தின் பெருந் தலைவர் வெளியிட்டுள்ளார். பன்னாட்டு மிளகுக் குழுமம் வருகின்ற ஆண்டு முதல் இதன் உறுப்பினர் நாடுகளில் சிறந்த மிளகு சாகுபடியாளர், மிளகு ஏற்றுமதியாளர் மற்றும் சிறந்த மதிப்பூட்டப்பட்ட மிளகுப் பொருள் வருடம்தோறும் தேர்வு செய்து கௌரவிக்கவுள்ளது. ✤




கடலூர் வட்டம், திருவந்திபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் செயல் எல்லையான திருமாணிக்குழி கிராமத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி 19.9.2023 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், கடலூர் சரகத் துணைப்பதிவாளர் திரு. வி.துரைசாமி கலந்துகொண்டு திருமாணிக்குழி கிராமத்தின் சாலையோரங்களில் மரக்கன்றுகளை நட்டார். இந்நிகழ்ச்சியில், கடலூர் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் செயலாட்சியர் திருமதி. ப.தேவி, திருவந்திபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் செயலாட்சியர் திருமதி. ஆர்.சரண்யா, சங்கத்தின் செயலாளர் திரு. ஆர்.ஜி.சேகர் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்ச்சியில் 50 மரக்கன்றுகள் நடப்பட்டது.

**கூட்டுறவு இதழுக்கு எழுத்தோவியங்களை அனுப்புவோர் அஞ்சல் / மின்னஞ்சல் மூலம் அனுப்ப வேண்டும். வெளியிடப்படாத எழுத்தோவியங்களைத் திரும்ப அனுப்ப இயலாது.**

**கூட்டுறவு இதழில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள் மற்றும் துணுக்குகளில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் எழுதுபவரின் கருத்தாகும். – ஆசிரியர்**

Printed at Central Cooperative Printing Works Limited, 83/95 Anna Salai, Chennai - 600 002 and Published on behalf of Tamilnadu Cooperative Union from 170, Periyar E.V.R. High Road, Kilpauk, Chennai - 600 010. Editor: K.G. Madhavan, Additional Registrar / Administrator, Tamilnadu Cooperative Union from 170, Periyar E.V.R. High Road, Kilpauk, Chennai-600 010.

Date of Publication : First Week of Every Month
Registered Newspaper in India No. 1103 / 57

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.
TNSC BANK LTD.,
Chennai - 600001.

வங்கிச் சேவையில் 100 ஆண்டுகளைக் கடந்த வங்கி
நம்பிக்கை – நாணயம் – அதிக பாதுகாப்பு

1 மாதச் சம்பளம் பெறுவோர்க்கு சம்பளக் கடன் ரூ.7 இலட்சம் வரை வட்டி 11% p.a

2 அரசு ஊழியர் / ஆசிரியர்களுக்கு தனி நபர் கடன் ரூ.1 இலட்சம் வரை வட்டி 11% p.a

3 சிறு / குறு வியாபாரிகளுக்கு சிறு வணிகக்கடன் ரூ.50,000 வரை வட்டி 10% p.a

4 E.M.I. நகைக்கடன் ரூ.2 இலட்சம் வரை வட்டி Flat 5% p.a

5 குறைந்த வட்டியில் விரைவான நகைக்கடன் ரூ.20 இலட்சம் வரை

6 குறைந்த வாடகையில் லாக்கர்கள் ரூ.999 முதல்

நகைக் கடன் கிராமுக்கு ரூ. 4000* வரை

- எந்தக் கிளையிலும் பரிவர்த்தனை செய்யும் வசதி
- RTGS / NEFT / IMPS
- Netbanking / Mobile Banking
- Billdesk Facilities

www.tnscbank.com
contact@tnscbank.com
25302316 / 25302354

* Conditions Apply






C.C. BANK
சென்னை மத்திய கூட்டுறவு வங்கி
215, பிரகாசம் சாலை, (பிராட்வே), சென்னை-600108.
நம்பகமான பாதுகாப்பு நிலையான வளர்ச்சி
தொலைபேசி எண் : 044-23458708 to 23458713 பேக்ஸ் :044-25381087
Web : www.ccbankchennai.com Email : ccb_bank@yahoo.co.in
(Since 1930)
சென்னை மாநகரில் 71 கிளைகள்
மைய வங்கியியல் சேவையுடன் கூடிய கிளைகள்
ATM மற்றும் SMS வசதி
RTGS / NEFT பணப் பரிமாற்ற வசதி
54 கிளைகள் குளிர்சாதனம் மற்றும் நவீன வசதிகளுடன்
சுமார் 10,000 வாடிக்கையாளர்களுக்கு நேரடி சமையல் எரிவாயு மானியம்
ரூ.500 கோடிக்கும் அதிகமான முதலீடு
வைப்பீடுகளுக்கு கூடுதல் வட்டி
ஆயுள்/ பொதுக் காப்பீடு சேவைகள்
அனைத்துத் தரப்பினருக்குமான கடனுதவிகள்
வீடு அடமானக் கடன்கள் / வீட்டுவசதி கடன்கள்
நகைக் கடன்கள் (பல்வேறு வட்டி விகிதங்களில்)
மாற்றுத்திறனாளிகளுக்கு வட்டியில்லா கடன்கள்
சிறுவணிகக் கடன்
சம்பளக் கடன்
சுய உதவிக் குழுக்களுக்கான கடன்
(IFS Code: TNSC0010500)




புதியதோர் உலகம் செய்வோம்!
89
திருச்செங்கோடு-637 211
வேளாண் பெருமக்களுக்கான சேவைகள்
விவசாய விளைபொருட்கள் ஏல விற்பனை விபரம்
திருச்செங்கோடு
பருத்தி, எள், நிலக்கடலை — செவ்வாய்
தேங்காய் பருப்பு — வெள்ளி
மஞ்சள் — சனி
கொங்கணாபுரம்
பருத்தி, எள் — சனி
நிலக்கடலை — ஞாயிறு, திங்கள், புதன்
மல்லசமுத்திரம்
பருத்தி — புதன்
நிலக்கடலை, மக்காச்சோளம் — திங்கள், வெள்ளி
தேங்காய் பருப்பு — வெள்ளி
இலகண்டாபுரம்
தேங்காய் பருப்பு — செவ்வாய்
இதர சேவைகள்
சங்கத்தின் சொந்த தயாரிப்புகள்
நகைக்கடன் 9.25%
தலைமையகம் திருச்செங்கோடு : 04288 - 252359, 250511
கொங்கணாபுரம் கிளை : 04283 - 265540, 265652
மல்லசமுத்திரம் கிளை : 04288 - 238425
0427 - 2352323
TCMS